தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
Postal Address: P O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au info@tsch.org.au

# தமிழறிவுப் போட்டி
# மூன்றாம் வகுப்பு
# 2018

# தமிழறிவுப் போட்டி – 2018

## ஆண்டு - 3

## ஆரம்பப்போட்டி - 30 கேள்விகள்

## முதல் சுற்று - 10 கேள்விகள்

ஒன்றுக்கு மேற்பட்ட விடைகள் தரப்பட வேண்டிய வினாக்களுக்கு அனைத்து விடைகளும் வழங்கினால் மட்டுமே சரியான விடையாகக் கருதப்படும்.

ஒவ்வொரு சரியான விடைக்கும் 10 புள்ளிகள்

எல்லா விடைகளையும் தரத்தவறினால் பிழையான விடை எனக் கருதப்பட்டுப் 5 புள்ளிகள் கழிக்கப்படும்.

முதற் சுற்று

10 கேள்விகள்

1. உயிர் எழுத்துக்கள் எத்தனை?

1. விடை:

12

2 முடிக்கவும்:

அறம் செய்ய விரும்பு ஆறுவது -----------

2 விடை: சினம்

3. முக்கனிகளில் எவை?

3. விடை:

மாம்பழம், வாழைப்பழம், பலாப்பழம்

4. கவிதைகள் எழுதுபவரை எப்படி அழைப்பர்?

4. விடை : கவிஞர், கவி

5 சிலப்பதிகார நாயகி யார்?

பின்வருவனவற்றில் ஒன்றைத் தெரிவு செய்க

1 சீதை

2 கண்ணகி

3 தெய்வயானை

5 விடை:

2. கண்ணகி

6. பொருட்களை வாங்கி விற்பவரை எப்படி அழைப்பர்?

6 விடை:

வியாபாரி

7. கவிச்சக்கரவர்த்தி யார்?

7. விடை: கம்பர்

8. குயில் கூவும். அதுபோல
மயில் என்ன செய்யும்?

8. விடை:

அகவும்

9. திருக்குறளில் எத்தனை குறள்கள் உள்ளன?

9. விடை: 1330

10. திருக்குறளை எழுதியவர் யார் ?

10. விடை : திருவள்ளுவர்

முதற் சுற்று முடிவடைந்தது.

இரண்டாம் சுற்று 10 கேள்விகள்

11. கப்பல் ஓட்டுபவரை எப்படி அழைப்பார்கள்

11. விடை:

மாலுமி

12. ஒரு வாரத்தில் எத்தனை நாட்கள் உள்ளன?

12. விடை: ஏழு

13. திருக்குறள் எந்த குறளுடன் ஆரம்பிக்கின்றது?

13. விடை:

அகர முதல எழுத்தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே உலகு

14. “வீரன்“ இதற்கு எதிர்ச் சொல் என்ன?

14 விடை:

கோழை

15. ஆத்திசூடியை எழுதியவர் யார்?

15. விடை: ஔவையார்

16. ஒரு வருடத்தில் எத்தனை மாதங்கள் இருக்கின்றன?

16. விடை: 12 மாதங்கள்

17. கண், காது, மூக்கு, வாய், உடல் இந்த ஐந்து உறுப்புக்களையும் எப்படி அழைப்போம்?

17. விடை:

ஐம்பொறிகள்

18. “மகிழ்ச்சி” இதற்கு எதிர்ச் சொல் என்ன?

18 விடை:

துக்கம், கவலை

19. “வீடு” இதற்கு வேறு சொல் என்ன?

19. விடை: இல்லம், அகம்

20. இது ஒருதோல் கருவி. கோயில்களில் இதைக் காணலாம். இது என்ன?

20. விடை: மேளம்

இரண்டாம் சுற்று முடிவடைந்தது.
மூன்றாம் சுற்று 10 கேள்விகள்

21. பத்திரிகைக்குச் செய்தி சேகரித்துக் கொடுப்பவரை எப்படி அழைப்பர்.

21. விடை: நிருபர்

22. எதிர்ச் சொல் தருக:

வெற்றி

22. விடை: தோல்வி

23. இவர் நீதிமன்றத்தில் தீர்ப்புக் கூறுபவர். இவர் யார்?

23. விடை: நீதிபதி

24. சிலப்பதிகாரத்தின் கதாநாயகன் யார்?

24. விடை:

கோவலன்

25. கண்ணகி எரித்த நகரம் எது?

1. இலங்கை
2. மதுரை
3. சென்னை

25. விடை:

மதுரை

26. என் அப்பாவின் தம்பி எனக்கு என்ன உறவு?

26. விடை:

சித்தப்பா

27. மிளகாய்ப்பழம் உறைக்கும் அதுபோல

வாழைப்பழம் என்ன செய்யும்?

27. விடை: இனிக்கும்

28. எதிர்ச்சொல் தருக

ஏழை

28. விடை:

பணக்காரன்

29. இவர் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பவர். இவர் யார்?

29. விடை:

ஆசிரியர்

30. விமானி என்பவர் யார்?

30. விடை:

விமானம் ஓட்டுபவர்

மூன்றாம் சுற்று முடிவடைந்தது.

அரை இறுதிச் சுற்று

15 கேள்விகள்

1. பாடகர் என்பவர் யார்?

1. விடை:

பாட்டுப் பாடுபவர்

2. ஐம்பெரும் காப்பியங்களில் இரண்டு சிலப்பதிகாரம், மணிமேகலை.

மற்றொன்று கூறுக?

2. விடை:

வளையாபதி,
குண்டலகேசி,
சீவகசிந்தாமணி.

3. இவர் காவல் செய்பவர்.

இவர் யார்?

3. விடை: காவல்காரன்

4. என் அப்பாவின் தங்கையின் கணவன் எனக்கு என்ன உறவு?

4. விடை: மாமா

5. சொல்லினுள் சொல் ஒன்று கூறுக?

குறிப்பிடும் சொல்லுக்கு விளக்கம் தருக

மதுரை

5. விடை:

மது - குடிவகை

மரை – மிருகம்

துரை - முதலாளி

6. வீட்டு மிருகங்கள் இரண்டு தருக

6. விடை:

நாய்

பூனை

ஆடு

மாடு

7. புலிக் கொடியை உடைய தமிழ் மன்னன் யார்?

7. விடை: சோழன்

8. வேறு சொல் தெரியுமா?

அரசன்

8 விடை:

மன்னன்

9. தமிழ்மறை என்று எந்த நூலைக் குறிப்பிடுவர்?

9. விடை: திருக்குறளை

(முப்பாநூல்)

10. பின்வரும் சொல்லினுள் இன்னுமொரு சொல் இருக்கிறது. அது கிழமையைக் குறிக்கும். அது எது?

**ஆரவாரம்**

10. விடை : வாரம்

11. மூவேந்தர்கள் யார்?

11. விடை:

சேர, சோழ, பாண்டியர்

12. நீண்ட கழுத்துடைய மிருகம் எது?

12. விடை:

ஒட்டகச்சிவிங்கி

13.

பின்வருவனவற்றுள் ஒன்று வேறுபடுகின்றது. அது எது?

1. வேட்டி
2. சேலை
3. பாவாடை
4. மணிக்கூடு

13. விடை:

4. **மணிக்கூடு**

14. நான் ஒருபறவை.
நான் தோகை விரித்து ஆடுவேன்.
நான் யார்?

14. விடை:

மயில்

15.

இந்த மாதம் சித்திரை.

சென்ற மாதத்தின் பெயர் என்ன?

15. விடை:

பங்குனி

அரை இறுதிப்போட்டி முடிவுற்றது

மேலதிக வினாக்கள் தேவைப்பட்டால்………

1. நிகழ்ச்சிகளை அறிவிப்பவர்

1. அறிவிப்பாளர்

2. “பள்ளிக்கூடம்” இதற்கு வேறு சொல் என்ன?

2. விடை: பாடசாலை, கல்லூரி

3. பசுவின் இளையது கன்று.

அதுபோல

ஆட்டின் இளையது என்ன?

3. விடை: குட்டி

# இறுதிப்போட்டி

## 15 கேள்விகள்

1. கடிதங்களை வீடுவீடாகச் சென்று கொடுப்பவர் யார்?

1. விடை: தபாற்காரர்

2. ஐம்புலன்களில் மூன்றைக் கூறுக?

2. விடை: சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்

3. ‘பொய்” இதற்கு எதிர்ச் சொல் என்ன?

3. விடை: மெய், உண்மை

4. குறளை முடிக்கவும்:

குழல் இனிது யாழ் இனிது என்பதம்

மக்கள் ---------

விடை:

குழல் இனிது யாழ் இனிது என்பதம்
மக்கள் **மழலைச் சொல் கேளாதவர்**

5. தமிழ் மொழிக் கல்வி தரும் ஹோம்புஷ் எனத் தொடங்கும் பாடலின் அடுத்த வரி என்ன?

5 விடை:

தமிழ் மொழிக் கல்வி தரும் ஹோம்புஷ்

**தமிழ்க் கல்வி நிலையம் வாழ்க**

6. நாய் குலைக்கும்.

குதிரை ..................

1. பிளிறும்
2. கனைக்கும்
3. அழும்
3. சிரிக்கும்

6 விடை:

2. கனைக்கும்

7. சொல்லினுள் சொல் - இரண்டு சொற்களைக் கண்டு பிடிக்கவும்!

கப்பல்

7. விடை:

கல்

பல்

8. இயல், இசை, நாடகம்

இதனை எப்படி ஒரு சொல்லில் அழைப்பர்?

8. விடை: முத்தமிழ்

9. இது காய்கறி வெட்டஉதவும். அது எது?

1. கத்தி
2. சட்டி
3. அடுப்பு
4. பானை

9. விடை: கத்தி

10 குழம்பியிருக்கும் இந்தச்சொல் என்ன?

# சி ய ஆ ரி ர்

10. விடை:

ஆசிரியர்

11. எமது கல்வி நிலையத்தில் பாடப்படும் தமிழ்மொழி வாழ்த்தை இயற்றியவர் யார்?

11. விடை:

பாரதியார்

12. சிலப்பதிகாரத்தை எழுதியவர் யார்?

12. விடை:

இளங்கோ அடிகள்

13. பொன் விழா எத்தனை ஆண்டுகளின் பின் நடத்தப்படுகின்றது?

13. விடை:

50

14. Stamp என்பதன் தமிழ்ச் சொல் என்ன?

14. விடை:

முத்திரை

15. ஒருவரைப் பாராட்டி நடாத்தும் விழா என்ன?

15. விடை:

பாராட்டு விழா

இறுதிப்போட்டி நிறைவுற்றது.

நன்றி

மேலதிக வினாக்கள்
தேவைப்பட்டால்.........

1. வீட்டில் சமையல் செய்யும் அறையை எப்படி அழைப்பீர்?

1. விடை:

சமையலறை

2 சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?

2 விடை:

இளங்கோவடிகள்